# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்!



19-08-2025

தனியதாய் சிலரிடதில் தழைந்திடும் நட்புவுண்டு!
இனியதாய் அதுவும் சீராய்த் தொடர்தலுமுண்டு!
கனிந்திடும் அன்பால் காலத்தை வென்று நிற்கும்!
பனியென படரும் அன்பில் பகையது ஏதும் இராது!

பக்குவமாய் காலம் சிலரைப் பழகிட வைத்ததுண்டு!
திக்குதிசை வேறாயினும் பணியால் தொடர்வதுண்டு!
எக்கனமும் பார்பதினால் இளமுறுவல் பூப்பதினால்,
சிக்கெனவே பிடித்துப்போய் தொடர்வதுண்டாம்!

சிந்தனையில் எனைநிறைக்கும் சீராளன் **அரங்கநாதன்,**
பந்தமாய் அவருடனும் சிலநேரம் சேர்ந்துப் பார்த்த,
மந்தமில் அறிவின் கேள்வன் **அனந்தாழ்வார்** மகனாம்,
சிந்தாத அறிவுச்சுடராகும் சீராளன் **பரத்வாஜ்** தன்னை

சிலகாலம் அங்கங்கே யானும்பார்த்துப் பேசியதுண்டு!
தளமாக சுங்கதுறை சார்ந்த பணியுமாகி நிலைபெறவே,
உளமாற என்னுடனும் உரையாடி மகிழ்வார் தானே!
அளவின்றி தொடர்ந்த அன்பு அடுத்தடுத்து நாளும்

வளர்ந்திடவே, நிலையாக அலைபேசி துணை நிற்க,
வளரும் பணியில் வாகைசூட எப்போதும் தொடர்புண்டு!
அளவளாவி அறிந்தேன் இன்று **பிறந்தநாள்** என்றே!
வளமெலாம் பெற்றுமனை மக்களுடன் **வாழிய பல்லாண்டு!**
அன்புடன்,

**கு.ப. அசோகன்,**
20-08-2025.



